**27.11.2024**

**O.S. No. 326/2019**

**வா.சா. 1 : அண்ணாமலை**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

10) நடுகவுண்டர் திண்ம்மாளுக்கு தீர்த்தன், சின்னபையன் என்ற பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் இல்லை. தீர்த்தன் அம்மா பெயர் எனக்கு தெரியாது. தீர்த்தன் இறந்த பிறகு அவரின் வாரிசுகள் தீர்த்தனின் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நடுக்கவுண்டரின் தீர்த்தான் என்பது வேறு நீங்கள் சொல்லும் தீர்த்தான் என்பது வேறு.

11) 12.06.2015ம் தேதி வெள்ளையன் மனைவி உன்னாமலை, 2, 3ம் பிரதிவாதிகள், 41 செண்டை 4ம் பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதே போல் தாவா சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் 51 முதல் 64 வரையான ஆவணமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2, 3, 5ம் பிரதிவாதிகள் தாவா சொத்து சம்பந்தமாக 2009ம் வருடம் பாக பிரிவினை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். நடுகவுண்டரின் சொத்தை எழுதிக்கொண்டார்கள். நான் ஊரில் இல்லாத சமயத்தில் எழுதிக்கொண்டார்கள்.

12) அண்ணாமலை இறந்த பின்னிட்ட அவரின் சொத்துகளை 6 முதல் 9 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

31.08.2016ம் தேதி தீர்த்தன் 151/3ல் 15 செண்ட் நிலத்தை 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் அவர்களுக்குள் எழுதிக்கொண்டார்கள். அந்த நிலத்தின் வருவாய் துறை ஆவணங்கள் 77 முதல் 88 வரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. மாது, அண்ணாமலை, பிச்சன் ஆகியோர் எழுதிக்கொண்ட பாக பிரிவினை ஆவணத்தை 33-வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

13) ச.எண்.151/3ன் கீழ் 0.81.0 ஹெக்டேர், 151/2ன் கீழ் 0.81.5 ஹெக்டேர், 159/12ன் கீழ் 0.14.5 ஹெக்டேர், சொத்துக்களை 2 முதல் 6 பிரதிவாதிகள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் அது அவர்களுடைய சொத்து அல்ல. அது போலியாக அவ்வாறு ஆவணங்கள் எழுதிக்கொண்டார்கள். ச.எண். 156/5ன் கீழ் 0.14.0 ஹெக்டேர் என்ற நிலத்தை நாங்கள் ஏற்கனவே விற்பனை செய்துவிட்டதால், வேறு நபர் பெயரில் உள்ளதால் நாங்கள் அந்த சொத்தில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

14) அதே போல் 1, 7, 8, 9 பிரதிவாதிகள் இந்த  வழக்கில் தேவையற்ற தரப்பினர்கள் என்பதால் அவர்களை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யதக்கது  கூடியது என்றால் சரியல்ல. செட்டில் மெண்ட் ஆபிசர் அளந்து கொடுத்த உத்தரவு நகலை பிரதிவாதிகள் வீட்டில் இருந்து எடுத்துக்கொண்டு வந்து வைத்துக்கொண்டு தகவல் அறியும்

உரிமைசட்டத்தின் படி 1 முதல் 10 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) பிரதிவாதிகள் 1 முதல் 5 ஆவணங்களை செட்டில் மெண்ட்க்கு முன்பாக கிரையம் பெற்றுள்ள நிலையில் எவ்விதமான ஆவணங்களோ மூலபத்திரமோ தாக்கல் செய்யாத நிலையில் வழக்கு சொத்துக்களின் மீது எவ்வித உரிமையும் கோர எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் பெற்ற கிரைய பத்திரம் மட்டும் சட்டப்படி செல்லதக்கது என்று சொன்னால் சரியல்ல.

16) தாவா சொத்துக்களில் நானோ, தீர்த்தனோ, அவருடைய அப்பா நடுக்கவுண்டரோ எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இருந்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் தாக்கல் வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**